
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
பரசிவ
வணக்கம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே . . . . .

1. வாழ்த்துரை
2. பரம் என்றால் ENERGY
3. இறைத் தத்துவம்
4. பெரிய பொருளான மெய்ப்பொருள்
5. தற்பரமது ஆன பரதேவதையை அஞ்சலி செய்வாம்

# வாழ்த்துரை

ஜெ. வெண்ணிலா

துணைப்பேராசிரியர்,

நாமக்கல்.

தாயுமானவரையும் வேதாத்திரி மகரிஷியையும் ஒப்பீடு செய்த இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு என்னை வாழ்த்துரை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு முதலில் நான் நன்றி சொல்ல வேண்டும்

ஏனெனில் மகான்களை பற்றி சிந்திப்பதற்கே பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

அப்படி சிந்தித்து ஒப்பீடு செய்து அதை வாழ்த்துவதற்கு என்னை அழைத்ததை நினைத்து பார்க்கும்போது "என்ன பாக்கியம் செய்தோனோ பராபரமே" என்று அந்த பரத்தை வணங்கி. . . . .

அந்த பரத்தின் விளக்கத்தை கொடுத்து அனுபவமாக்கிய குருவையும் வணங்கி இதுவும் குருவின் அருளால் தான் என்று நன்றியை குருவிற்கே சமர்ப்பணம் செய்கிறேன்

தாயுமானவர் என்று சொல்லும்போது முதலில் நமக்கு நினைவுக்கு வருவது

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
    ஆனந்த பூர்த்திஆகி,

பாடல் வரிகள் தான். இந்த ஒரு பாடலிலேயே அனைத்து விளக்கமும் கொடுத்துவிட்டார். அதோடு மட்டுமல்லாமல்

**மனத்துக்கும் வாக்குக்கும் --தட்டுப்படாமல் நின்றது எது?**

“எது” என்று கேட்டாலே நாம சிந்திக்க ஆரம்பித்து விடுவோம் இது தான் சித்தர்கள், ஞானிகளின் சிறப்பு (tactics) இது தான் என்று வெறுமனே சொல்லிவிட்டால் நாம் நம்ப மாட்டோம்.

எது என்று கேட்டால் நாமே சிந்தித்து பதில் தேடி நிறைவு பெறுவோம் தாயுமானவர் எது? எது? என்று கேட்கிறார்

மகரிஷி – அவனில் தான் நீ, உன்னில் அவன் – அவன் யார்?
நீயார்? பிரிவேது?

முதலில் விஷயத்தை நமக்கு வெகு அழகாகவும், நேர்த்தியாகவும் எடுத்து சொல்லிவிட்டு அவர் சொன்ன விஷயத்தை தொடர்ந்து கேள்விக் கணைகளை நம்முள் விதைத்து சிந்திக்க வைக்கிறார். வேதத்தின் உட்பொருளாகிய வேத நாயகன்

எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்

சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு இது தான் உண்மை என்றோ, அல்லது இதை தான் நீ நம்ப வேண்டும் என்றோ நம்மை அவர் கட்டமைப்பிற்குள் சிக்க விடாமல் நீயே சிந்தித்து உணர்ந்து கொள் என்று பொறுப்பை நம்மிடையே விட்டுவிடுகிறார்.

இது தான் ஒரு சிறந்த குருவிற்கு அடையாளமாகவும் வெற்றியாகவும் அமைந்தது என எண்ணத் தோன்றுகிறது

மேலும் இவ்வளவு பெரிய பேருண்மையை சொல்லிவிட்டு இது உண்மையானால் ஏற்றுக்கொள், உண்மை இல்லை என்று நீ

நினைத்தால் யூகம் என்று எடுத்துக்கொள் என்று முழு சுதந்திரத்தை நமக்கு கொடுத்து கடை தேர்த்த பெருமை இவரையே சேரும்

என்னை மிகவும் கவர்ந்த, அடிக்கடி நினைவுக்கு வரும் பாடல் வரிகள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

இராமலிங்க வள்ளலார் – "வானத்தின் மீது மயில் ஆடக் கண்டேன் மயில் குயில் ஆச்சுதடி"

என்று பரவெளியின் அழகையும், அதன் அதீத நிலையையும் நமக்கு எடுத்துக் கூறுகிறார்

மற்றும் திருமூலர் பாடல் வரிகளில்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தன பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தன பார்முதல் பூதமே – திருமூலர்.

எதை என்ன கண்ணோட்டத்தில் நீ பார்க்கிறாயோ அதுவாக ஆவாய் என்று திருமூலர் சுட்டிக்காட்டி விளக்கம் கொடுக்கிறார்

மேலும் மகரிஷியின் பாடல் வரிகளில்

காந்த நிலை அறியாமல் கடவுள் நிலை அறிவதோ?

கருமையம் அறியாமல் அறிவினை அறிவதோ?

என்ற பாடல் வரிகள் என்னை சிந்தித்து சீர் அமைத்துக்கொள்ள பேருதவியாக இருந்தது

"ஒவ்வொரு பொருளும் பரம முதலாய்

அவ்வுரு வரையில் வந்த கதை

செவ்விய பரிணாமம்

சிறப்பை உணர்வாய் நீயும்அதே"

உன்னுடைய சிறப்பை நீயே உணர்ந்து கொள்ள முடியும் என்றும்

எல்லா பொருளுமே பரத்தில் இருந்து தான் வந்து இருக்கிறது என்ற சிறப்பை உணர்ந்து கொண்டால்

> "அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்
> அறிவு முழுமை அது முக்தி. "

ஆக, உலகில் தோன்றிய அத்தனை மகான்களும், ஞானிகளும் ஒரே கருத்தை தான் வெவ்வேறு கோணத்தில் நமக்கு சொல்லி இருக்கிறார்கள்

அப்படி சொல்லி இருக்கக் கூடிய கருத்துகளில் இரத்தின சுருக்கமான பாடல்களை மட்டும் கையாண்டு சுருக்கமாகவும் எளிமையாகவும் தன் எழுத்தாற்றலால் விளக்கம் கொடுத்து இருக்கிறார் வேதாத்திரிய பார்வையில் உணர்ந்த நூல் ஆசிரியர் அருள்நிதி பானுக்குமார் ஐயா அவர்கள்.

தலைப்பு என்னவோ வேதாத்திரிய பார்வையில் தாயுமானவர் என்று இருந்தாலும் இராமலிங்க வள்ளலார், திருமூலர், பட்டினத்தார் மற்றும் வேதாத்திரி மகரிஷி பாடல்களும் இடம் பெற்று இருப்பது மேலும் சிறப்பை கூட்டுகிறது என்று தான் சொல்ல வேண்டும்

அயராத உழைப்பு, தொடர் முயற்சி, வாசகங்களில் வற்றாத இளமை, அனைவரைக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற தொண்டுள்ளம் இவை எல்லாம் ஆசிரியரை மட்டுமல்ல ........

இதை படித்து உணர்ந்து, அனுபவித்து, ஆனந்தித்திருக்கும் நம் அனைவருக்கும் என்றும் எப்போதும் கிட்ட வேண்டும் என்று குருவின் அருளோடும், ஆசியோடும் எனது வாழ்த்துரையை நிறைவு செய்து கொள்கிறேன். வாழ்க வளமுடன்

ஜெ. வெண்ணிலா

“எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே”

# பரம் என்றால் ENERGY

தாயுமானவர் தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருமறைக்காடு என்று அழைக்கப்படும் வேதாரண்யத்தில் பிறந்தார்.

இவர் தந்தையார், கேடிலியப்ப பிள்ளை, தாயார், கெஜவல்லி அம்மாள். இவர் வடமொழி, தமிழ் மொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்றவர்.

தாயுமானவர் திருச்சிராப்பள்ளியை ஆட்சிபுரிந்த விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் அரச கணக்கராகப் பணிபுரிந்து வந்தார்.

அப்போது முக்கியமான ஆவணம் ஒன்றை அரசவையில் தாயுமானவர் கையால் கசக்கிப் போட்டுவிட்டார்.

தாயுமானவர் தன்னிலை மறந்து இறைவியுடன் ஒன்றிப்போய் இருந்தார். இந்தக் காரியம் செய்வதை அறியாத சபையினர் அரசனுக்கும், அரசிக்கும் அவமரியாதை என அவதூறு பேசினார்கள்.

ஆனால், அதே சமயம் திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி கோயிலில், அம்பாளின் ஆடையில் நெருப்புப் பற்றியதைச் சிவாசாரியார்கள் கவனிப்பதற்குள் தாயுமானவர் நுழைந்து தம் கையால் கசக்கி அந்த நெருப்பை அணைத்ததைச் சிவாசாரியார்கள் கண்டனர்.

அவர்கள் உடனே ஓடோடி வந்து நடந்ததைக் கூற, தாயுமானவரின் சக்தியைப் புரிந்து கொண்டு வியந்தனர் என்பார்கள்.

தாயுமானவர் பதவியைத் துறந்து திருமூலர் மரபில் வந்த, திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த மௌன குரு என்பவரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டார்.

இவரது பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம் எனப்படுகின்றன.

தாயுமானவர் மனிதகுலம் உய்வடைவதற்கு மாபெரும் சிந்தனைகளை பாடல்கள் மூலம் மானுடத்திற்கு தந்துள்ளார்கள். உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக, மகிழ்வோடு வாழவேண்டும் என்பதே தாயுமானவர் கொள்கை.

உலக உயிர்கள் அனைத்தும் ஒன்று. ஒத்த நிலையுடையன என்பது அவர் கண்ட உண்மை. எல்லா உயிர்களும் தன்னுயிராகப் பாராட்ட விழைந்தார்.

"எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் தபோதனர்கள்

செவ்வறிவு நாடிமிகச் சிந்தனை வைப்பது எந்நாளோ" (பாராபர)

அவ்வாறு கருதத் துணையாக நின்றது. அவர் எவ்வுயிரினம் இறைவனைக் கண்டமையே –

"எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ் உயிராய்

அங்கங்கு இருப்பது நீ அன்றோ பராபரமே"

இத்தகைய உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக, மகிழ்வோடு வாழவேண்டும் என்பதே தாயுமானவர் கொள்கை.

அவரது பரந்து விரிந்த மனப்பான்மையை அவருடைய இத்தகைய எண்ணங்கள் காட்டுகின்றன.

இக் குறிக்கோளை, இன்ப வாழ்வை எய்துதற்குரிய வழியொன்று அவர் வேண்டுகோளால் வெளியிடப்படுகிறது.

"அன்பர் பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்

இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே"

தாயுமானவர் பரசிவ வணக்கத்தில் (இறைவணக்கத்தில்) மூன்று பாடல்களை 48 வரிகளில் பாடியுள்ளார்.




இராமலிங்க வள்லாரும் திருஅருட்பாவில் பரசிவ வணக்கத்தில் நான்கு பாடல்களை 22 வரிகளில் பாடியுள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி இறை வணக்கத்தில் மூன்று பாடல்களை 32 வரிகளில் பாடியுள்ளார்.

பரம்பொருள் என்ற சொல்லை பரம் + பொருள் என இரண்டாக பிரித்து பார்த்தால் அதன் உண்மை தெரியும்.

பரம் என்றால் ENERGY - பொருள் என்றால் MATTER இரண்டும் தனி தனியாக இருக்கும்போது சும்மா கிடக்கும்.

இரண்டும் ஒன்று சேரும் போது இயக்கம் நடைபெறுகிறது

இதைத்தான் சிவம் என்றும் சக்தி என்றும் அடையாளம் காட்டினார்கள் நம் முன்னோர்கள்.

அதனால்தான் சக்தியில்லையேல் சிவம் போல் கிட என்று விளங்க வைத்தனர்

சிவமும் சக்தியும் இணைந்தால்தான் இவ்வுலகிலும் அண்டத்திலும் இயக்கங்கள்
உண்டாகும் என்பதை அர்த்த நாரீஸ்வர வடிவத்தில் நமக்கு

உணர்த்தினார்.

இந்த தத்துவம்தான் கணக்கற்ற புராணங்களாக வடிவெடுத்து காலந்தோறும் மனிதர்களுக்கு பரம்பொருளின் தத்துவத்தை. உணர்த்தி வந்து கொண்டிருக்கின்றன.

தாயுமானவரின் பரசிவ வணக்கத்தை வேதாத்திரியத்தின் இறை வணக்கப் பாடல்களுடன் இங்கு ஒப்பீடு செய்து இன்பமுறுவோம்.

# இறைத் தத்துவம்

ஒரு – முழுமையான கடவுள் தத்துவத்தை – நமக்குத் தருகிறார்– தாயுமானவர்.

- **பரமாத்மாவே -- ஜீவாத்மாவாக வருகிறது -- என்ற உபநிடதக் கருத்துக்கும்,**
- **எனது தந்தையும் நானும் ஒன்றே --- என்ற விவிலியத்தின் வாசகத்துக்கும்,**
- **அனைத்துப் புகழும் இறைவனுக்கே -- என்னும் திருக்குர்ரானின் வசனத்திற்கும்,**
- **சிவமே சீவனாயிற்று --- என்ற சைவசித்தாந்தப் பார்வைக்கும்,**
- **அறிவேதான் தெய்வம் -- என்ற தாயுமானவரின் வாக்கிற்கும்,**
- **அறிவேதான் நான் -- என்ற இரமணரின் உள்ளுணர்விற்கும்,**
- **ஆதிசங்கரரின் – நிர்வாண சதகத்திற்கும்,**
- **வேதாத்திரி மகரிஷியின் – சுத்தவெளி தத்துவத்திற்கும்,**

தர்க்கரீதியான -- விஞ்ஞானப் பூர்வமான -- விளக்க உரையாக தாயுமானவர் தந்துள்ளார்.

அந்த கடவுளின் முகவரியை, அருள்வெளியின் விலாசத்தை – வெட்டவெளியின் விலாசத்தை --- தாயுமானவர் போல் -- மானுடத்திற்குச் விளக்கமாகச் சொன்னவர் யாருமில்லை!

திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் என்னும் தலைப்பிலே-- எழுதப்பட்டுள்ள மூன்று பாடல்களிலுமே, குறிப்பிட்ட தெய்வம் என்று --குறிப்பிடாமல், தூய அத்வைத வஸ்துவைக் குறித்த-- விசாரணையும், அந்த துரிய பரம்பொருளின் --வணக்கமுமாக செல்கின்றன பாடல்கள்.

காலமாய், வெறும் வெளியாய் விரிந்திடும்-- அகண்ட ககனமெங்கும் காலம் காலமாய் தவழ்ந்திடும் --- அனந்தகோடி உயிர்களை ஆக்கி, காத்து, அழித்து-- அந்தச் சுழற்சி நாடகமாடும், எல்லைகளில்லாப் பரமனுக்கு அஞ்சலியே தாயுமானவரின் முதல் பாடல்.

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
    ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன்அருள் வெளிக்குளே
    அகிலாண்ட கோடியெல்லாம்

தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
    தழைத்தது எது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
    தம்தெய்வம் எம்தெய்வம் என்று

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?
    எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல் ஒரு சித்தாகி இன்பமாய்
    என்றைக்கும் உள்ளது எது? மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது? அது
    கருத்திற்கு இசைந்தது அதுவே.
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
    கருதிஅஞ் சலிசெய்குவாம் (தா.பா. 1)

மெய்ப்பொருள்- வெளி, வெட்டவெளி, சுத்தவெளி என்ற கடவுள் எங்கிருக்கிறார் என்ற ஆறு கேள்விகளை நம்மிடமே வைக்கிறார் தாயுமானவர்.

1. அங்கு எங்கு என்று சொல்ல முடியாதபடி, அண்டவெளி முழுவதும்- எங்கும் - நிறைந்து விளங்கும்- ஒளிமயமாகி. உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும்- நிறைவான ஒன்றாகி, தனது திருவருளாகிய- சக்தியோடு கூடி, எங்குமாய் - நிறைந்து நின்ற பொருள் எது?

2. தனது திருவருளாக விளங்கும் – ஆகாயத்தின்கண்-- அண்ட கோடிகள் -- அனைத்தும் தங்குமாறு-- விரும்பி இடம் கொடுத்து, உயிருக்கு உயிராய் நின்று, அவ்வுயிர்களைத் தழைக்கச் செய்தது-- எது?
3. மனத்துக்கும் வாக்குக்கும் -- தட்டுப்படாமல் நின்றது எது?
4. சமயகோடிகள் பலவும், “இது -- எங்கள் தெய்வம், இது-- எங்கள் தெய்வம்!” என்று --எவ்விடத்தும் தங்களுக்குள்-- தொடர்ந்து எதிர்வழக்கு ஆடும்படி -- செய்த பொருள் எது?
5. எல்லா இடங்களிலும் பேசப்படுவதும், எல்லாப் பொருள்களையும் -- இயக்கும் அறிவாய் விளங்குவதும், உயிர்களுக்கு இன்பப் பேற்றினை வழங்குவதும்-- எல்லா காலத்திலும் -- நிலைத்து நிற்பதும், ஆகிய பொருள் எது?
6. மேலான --இரவுபகல் அற்ற-- எல்லையில் உள்ள பொருள் எது?

இந்த ஆறு கேள்விகளுக்கும் --தாயுமானவரே பதிலும் சொல்கிறார்.

எது? எது? எது? என்ற கேட்ட - அந்த அது - நம்முடைய கருத்திற்கு இசைந்தபொருளே.

அந்தப் பொருளையே-- கண்ணால் காணும் பொருள்கள் அனைத்துமாகவும், மௌனமே உருவமான வெளியாகவும்-- (வெட்டவெளியாகவும், சுத்தவெளியாகவும். அருள்வெளியாகவும், தூய ஒளியாகவும்) நினைத்து வணங்குதல் செய்வோம்.

# வேதாத்திரியத்தின் இறை கோட்பாடு என்ன?

வெளி என்றால் என்ன? விடையாக வருகிறார் வேதாத்திரி மகரிஷி.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேறறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம்" என்கிறார்.


இறைவெளிக்குத் தன்னைத் தானே இறுக்கிக் கொள்ளும் தன்மை உண்டு. இறைவெளியின் இந்தத் தன்னிறுக்கம்தான் அதன் தன்மாற்றத்திற்கான முழுமுதற்காரணம்.

எனவே இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காண்கின்ற காணாத அனைத்தும் வெளியின் தன்மாற்ற வடிவங்களே என்கிறது வேதாத்திரியம்.

எல்லாம் சுத்தவெளி என்ற தெய்வத்தின் செயல் என்பதை எட்டு வரிகளில் வேதாத்திரியம் சொல்லியிருக்கிறது.

ஆதியெனும் பரம்பொருள்மெய், எழுச்சிபெற்று
அணுவென்ற உயிராகி அணுக்கள்கூடி
மோதியிணைந்து இயங்குகின்ற நிலைமைக் கேற்ப
மூலகங்கள் பலவாகி அவையிணைந்து,
பேதித்த அண்ட கோடிகளாய் மற்றும்
பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி,
நீதிநெறி உணர் மாந்தராகி , வாழும்
நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம். (ஞாக.பா.1)

ஆதி என்றால் அதற்கு முன்னதாக என்று கூறுவதற்கு எதுவுமில்லை. எனவே அனாதி எனலாம். பரம் என்றால் அதைவிடப் பெரியதுமில்லை. நுண்ணியதும்" இல்லை



பொருள் என்றால், எது நீடித்ததோ, நிலைத்தோ, மாறாததோ அதுவே உண்மைப்பொருள் சத்தியப்பொருள்.

மெய் என்றால் உடலென்ற பொருளும் வரும். உண்மை என்ற பொருளிலும் பயன்படுத்துகிறோம்.

நாம் சாதாரணமாகத் தோற்றப் பொருட்களையே பொருள் என்று கூறிப் பழகியுள்ளோம். அதனால்தான் வள்ளுவரும் "பொருள் அல்லவற்றைப் பொருள் என்று கூறும் மருளானாம் மாணாப் பிறப்பு" என்கிறார்.

ஆதியாகிய, மெய்ப்பொருள், இப்படித்தான் இயங்கவேண்டும் என்ற தன் அறிவாலும், தனது ஆற்றலாலும் இருப்பாக இருந்தது எழுச்சி பெற்று, இயக்க மலர்ச்சியில் அணு என்ற உயிராகியது.

மெய் அசைந்தால் அது உயிர், அணுக்கள் நெருங்கி இயங்கும்போது மூலகம் என்ற நிலையில் நிலம், நீர், நெருப்பு, காற்று எனும் பௌதீகப் பிரிவுகளாகி, பௌதீகப் பிரிவுகள் இணைந்து எண்ணிலடங்காத கோள்களை உள்ளடக்கிய பேரியக்க மண்டலமாகியது.

எண்ணிலடங்காத கோள்களில் ஒரு கோள் ஆகிய நிலவுலகத்தில் ஐந்து பௌதீகப் பிரிவுகளும் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் இணைந்து ஒன்றையொன்று காக்கும்படியான அமைப்பில் காந்தச் சுழலும் கருமையமும் அமைந்த போது, சடமாக இருந்தது ஜீவன் என்ற நிலையில் மலர்ச்சி பெற்றது.

உணர்தல் என்ற சிறப்பில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை தன்நிலையில் மாற்றம் பெற்றது. இயற்கை நியதியை அறிந்து தெளிந்து ஆறாவது அறிவு பெற்ற மனிதர், வாழ்வின் நோக்கத்தையும்,

பிறவியின் நோக்கத்தையும் உணர்ந்து ஒத்தும் உதவியும் இனிமையாக வாழ்வோம்.

மெய்யியல், விண்ணியல், பிரபஞ்சவியல், உயிரியல், மானுடவியல் ஆகிய அனைத்து அறிவியலும் இணைந்துள்ள சுருக்கமான விளக்கத்தை இந்த இறைவணக்கக் கவி உணர்த்துகிறது.

அது என்ற சுத்தவெளி அங்கு, இங்கு என்று இல்லாமல் எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களிலும், எல்லா இயக்கங்களிலும், எல்லா விளைவுகளிலும் குறைவில்லாமல் நீக்கமற நிறைந்துள்ளது

கல்லார் கற்றார் செயல்விளைவாய்க்

காணும் இன்ப துன்பமவன்.

வலுவான நம் உடலை இயக்குவதும், உயிராக இயங்குவதும், அறிவாக உணர்வதும் அதே தெய்வம் என்ற சுத்தவெளியில்தான் என்பதை உணரலாம்.

இயக்குவது அறிவு, இயங்குவது உயிர், உணர்வது மனம். இவையெல்லாம் எல்லைகட்டிய உடலுக்குள் இருப்பவை.

இவற்றையெல்லாம் கற்றவர்களாயிருந்தாலும், கற்காதவர்களாக இருந்தாலும், அவர்களின் செயல்பாடுகளில் மலரும் விளைவு இன்பம் அல்லது துன்பம் என்பது தெய்வ நீதியாகும்.

மனிதன் தன்னை மாற்றிக் கொள்கிற பக்குவத்தின் அடையாளமே ஆறாவது அறிவு.

தன்னைத்தானே மாற்றிக் கொள்கிற அதிகாரத்தை மனிதனில் அமைத்தது சுத்தவெளியின் பேரறிவுதான்.

அமைத்த அதிகாரத்தை சுத்தவெளியின் பேரறிவு ஒரு போதும் அகற்றாது.

ஆனால், தனக்குள் அமைந்துள்ள ஏதேச்சை அதிகாரத்தை, ஒருவர் தவறாகப் பயன்படுத்தினால், அதற்கான துன்ப விளைவை அவர் எதிர்கொள்ள வேண்டும்.

அவனில்தான்நீ, உன்னில் அவன்-அவன் யார்? நீயார்? பிரிவேது?

பிரபஞ்சம் முழுவதும் இருப்பாக உள்ள தெய்வம் என்ற சுத்தவெளி, தன் ஆற்றலால் இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற இயல்பூக்கமாகிய அறிவால் அணுக்களாகி அவைகள் கூடிய கொத்தியக்கம்தான் சடப் பொருள்களாகவும் ஜீவன்களுமாகத் தன்நிலையில் மாற்றம் பெற்றுள்ளது.

எனவே, உனக்குள்ளாக தெய்வமும், தெய்வத்திற்குள்ளாக நீயும் இருப்பதை உணரும்போது, தெய்வமும் நீயும் பிரிவற்ற நிலையில் ஒன்றாகிவிட முடியும்.

"அவன் யார்? நீயார்? பிரிவேது"

என்றும்

"அவனின் இயக்கம் அணுவாற்றல்,
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ" **(ஞாக.பா.2)**

என்ற வரிகள் வாயிலாகவும்,

பழுத்த நிலை வரும் வரையில் நீ, நான் என்போம்
பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்" **(ஞாக.பா.3)**

என்ற வரிகள் வாயிலாகவும் அணுமுதல் அனைத்தும் சுத்தவெளியின் நிலைகள் என்பதையும், அனைத்தும் சுத்தவெளியின் செயல்களே என்பதைம் உணரலாம்.

"எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே

சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்

வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவும் அவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான் நீ உன்னில்அவன்
அவன் யார்? நீயார்? பிரிவேது?

அவனை மறந்தால் நீ சிறியோன்
அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்
அறிவு முழுமை அது முக்தி.“ (ஞாக.பா.2)

உமது செயலன்றி, தமது செயல் என எதுவும் செய்வதில்லை என்பதை உணர்ந்த தாயுமானவர், திருமூலர் வழியில் “அவனின்றி ஓர் அணுவும் அசையாது” என்ற தத்துவத்தை மானுடத்திற்கு சொல்லியுள்ளார்

தாயுமானவர் சொன்ன-- சிந்தனையை வேதாத்திரிய வழியில் ஏற்போம். அவர்கள் வழியில் --செல்வோம். ஆனந்தமடைவோம்! ஆனந்தம் –ஆனந்தம்- ஆனந்தமே!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!!

# பெரிய பொருளான மெய்ப்பொருள்

தீராத பல பிறவிகள் எடுத்து வருந்தி வருந்தி அலைகின்ற மனமே! அழியாத பதவியாகிய முத்திப் பேற்றுக்கு மருந்து சொல்கிறேன்.

கேட்பாயாக! தோற்றம் இல்லாதவனை, மழுவையும் மானையும் கைகளில் ஏந்தி இருப்பவனை, திருமாலை இடபமாக்கி ஏறி வருபவனை. மனத்தால் தியானித்து. கண்களில் நீர் சிந்தி, தேம்பி அழுது. "ஞானம் வேண்டும்! என்று வேண்டுவாயாக – என்று பட்டினத்தார் ஒழியாப் பிறவி எடுத்து ஏங்கியதையும், அப்பிறவி அறுக்க வழியையும் சொல்லுகிறார்.

"ஒழியாப் பிறவி எடுத்துஏங்கி ஏங்கி உழன்ற நெஞ்சே

அழியாப் பதவிக்கு அவுடதம் பேட்டி அநாதியனை

மழமான் கரத்தனை மால்விடை யானை மனத்தில்உன்னி

விழியால் புனல்சிந்தி விம்மி அழுதன்மை வேண்டும் என்றே" (பட்.பா.144)

தாயுமானவரும் பட்டினத்தாரைப் போல பல பிறவிகள் எடுத்ததை – "பிறந்த ஊர்கள் பல. பெற்ற பெயர்கள் பல.

சூழ இருந்த உறவுகள் பல. செய்த நல்வினை தீவினைகளின் பயனாய்ப் பெற்ற உடல்கள் பல.



செய்யும் செயல்கள் பல. எழுந்த எண்ணங்களும் பல. பெற்ற பேரும் புகழும் பல.

சென்று வந்த சொர்க்க நரகங்களும் பல. வழிபட்ட நன்மை செய்யும் தெய்வங்களும் பல.

வேறுபட்ட கருத்துகளுடன் கூடிய சமயங்களும் பல." என்று இந்தப் பாடலில் பாடுகிறார்..

பட்டினத்தாரைப் போலவே தாயுமானவரும் பெரிய பொருளான மெய்ப்பொருளை வணங்கி தொழுது உய்வோம் என்கிறார்.

ஊர் அனந்தம் பெற்ற பேரனந் தம் சுற்றும்
உறவு அனந்தம். வினையினால்
உடல் அனந்தம் செயும் வினை அனந்தம் கருத்
தோஅனந் தம் பெற்றபேர்

சீர் அனந்தம், சொர்க நரகமும் அனந்தம். நல்
தெய் வமும் அனந்தம். பேதம்
திகழ்கின்ற சமயமும் அனந்தம். அதனால் ஞான
சிற்சக்தியால் உணர்ந்து,

கார் அனந் தம் கோடி வருஷித்தது என அன்பர்
கண்ணும் விண் ணும் தேக்கவே,
கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலை. நம்
கடவுளைத் துரிய வடிவைப்.

பேரனந்தம் பேசி மறை அனந்தம் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்.
பேசரும் அனந்தபத ஞான ஆனந்தம்ஆம்
பெரிய பொருளைப் பணிகுவாம். (தா.பா.2)


(உயிர்கள் பல பிறவிகள் சென்று வந்துள்ளமையால்)

- பிறந்த ஊர்கள் பல.
- பெற்ற பெயர்கள் பல.
- சூழ இருந்த உறவுகள் பல.
- செய்த நல்வினை தீவினைகளின் பயனாய்ப் பெற்ற உடல்கள் பல.
- செய்யும் செயல்கள் பல.
- எழுந்த எண்ணங்களும் பல.
- பெற்ற பேரும் புகழும் பல.
- சென்று வந்த சொர்க்க நரகங்களும் பல.
- வழிபட்ட நன்மை செய்யும் தெய்வங்களும் பல.
- வேறுபட்ட கருத்துகளுடன் கூடிய சமயங்களும் பல.

அதனால் . . . . . . . . . . . . . .. . . . . . . . .

- ஞானத்தைத் தரும் பராசத்தியின் அருளால் உணர்ந்து,
- மேகக் கூட்டம் பெருமளவில் திரண்டு வந்து மழையினைப் பொழிவது போல,
- அன்பர்களது கண்ணிலும்,
- மனமாகிய விண்ணிலும் திருவருளாகிய நீரைத் தேக்கி,
- எண்ணுதற்கரிய பேரின்பமாகிய மழையினைப் பொழியும் மேகத்தை.
- நமது கடவுளை.
- நாலாம் நிலையாகிய துரிய வடிவத்தை.
- பல பெயர்களால் புகழ்ந்து பேசப்படுவதும்,
- பல வேதங்களாலும் சிறப்பித்துச் சொல்லப்பட்டதும்,

ஆகிய மௌனம் என்னும் நிதிக்குவியலை. பேசுவதற்கு அருமை உடையதும், எல்லையற்றதும், ஞானமயமானதும் ஆன பெரிய பொருளைப் பணிந்து வணங்குவோம்.




தாயுமானவர் வணங்கும் பெரிய பொருளான மெய்ப்பொருளை வேதாத்திரியம் விரிவாகவும் எளிமையாகும் விளக்கி உள்ளது.

தாயுமானவர் வணங்கும் பெரிய பொருளான மெய்ப்பொருள் என்பது என்ன? வேதாத்திரியம் விடையாக வருகிறது. . . . . .

"உணர்ச்சிக்கு எட்டுகின்ற தோற்றம் யாவும்.

உண்மையிலே பொருளல்ல. நிகழ்ச்சியேதான்!

உணர்ச்சியோ உயிராற்றல், உயிரோ தெய்வ

உவப்புதான். உண்மைநிலை தெய்வமேதான்!" (ஞாக.பா.1120)

மனிதன் கண்ணால் கண்டு, காதால் கேட்டு, நாவால் சுவைத்து. மூக்கால் முகர்ந்து அனுபவிக்கின்ற உணர்ச்சிக்கு எட்டுகிற தோற்றங்கள் யாவும் மெய்ப்பொருள் அல்ல.

எது நீடித்து நிலைத்து மாறாமல் என்றும் இருப்பதோ அதுவே உண்மைப் பொருள் என்னும் மெய்ப்பொருள் ஆகும்.

தோற்றப் பொருட்கள் யாவும் நிகழ்ச்சிகளே ஆகும். அவை தோன்றுகின்றன. மாற்றம் பெறுகின்றன. மறைந்தும் விடுகின்றன.

மனிதனில் ஏற்படுகிற உணர்ச்சிக்கு உயிர் ஆற்றல் தான் காரணம். உயிர் இயங்கினால் தான் அதனுடைய தள்ளல் – கொள்ளல் சக்தியாகிய ஜீவகாந்தம் தன்மாற்றம் அடைந்து அழுத்தம் முதல் மனம் வரை உணர்வு நிலையாகிறது.

உயிர் என்பதோ தெய்வ நிலையில் விருப்பத்தால் எழுச்சி பெற்ற விண் ஆகும். உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே உண்மை நிலையாகிய தெய்வம் ஆகும்.

எல்லாமே மெய்ப் பொருளே என்பது வேதாத்திரியம். . . . . .

"அருவமே உருவமாய், ஆதியே அறிவாய்,

அறிவே குணங்களாய். அனுபவம் ஒழுக்கமாய்,

இருளே வெளிச்சமாய், இன்பமே துன்பமாய்,

மௌனமே சப்தமாய், மாறியது அறிவீர்." (ஞாக.பா.1129)

பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்தும் சடப்பொருட்கள், சீவன்கள் என்னும் இரு தோற்றங்கள் ஆகும்.

தோற்றங்கள் அனைத்தும் உருவங்களாக எல்லை கட்டி இயங்குகின்றன. அந்த இயக்கங்களை எல்லாம் கழித்து விட்டால் இருப்பு ஆகிய அரூபமே உள்ளது.

எனவே அரூபமே தன் நிலையில் பெற்ற மாற்றமே உருவங்களாகி உள்ளது. அந்த அரூபத்திற்கு முன்னதாக ஏதுவுமில்லை.

ஆதலால் அதுவே ஆதியானது. ஒவ்வொரு இயக்கமும் இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற ஒழுங்கு தவறாது நடைபெறுவதால் அரூபம் அறிவாகவும் உள்ளது.

அந்த அறிவே சடப்பொருடகளில் அதனதன் தன்மையாக சீவன்களில் மனமாக, மனிதனில் அனுமானம் என்னும் அறிவாக குணங்களாக வெளிப்படுகிறது.

அந்த குணமே மனித மனமாக அனுபவங்களாக, அந்த அனுபவங்களும் ஒழுங்கு முறையாக வெளிப்படுகிறது.

இருள் என்ற இருப்பே, வெளிச்சம் என்ற இயக்கமாகவும், இன்பம் என்று மனம் கருதுவது இயற்கைக்கு முரணாகும் போது துன்பமாகிறது.

ஓம்காரம் என்ற மௌனமே இயக்ககளத்தில் ஒலியாக மாறுகிறது. இருப்பு என்பதே இயக்கமாகவும் இயக்கம் என்பதே இருப்பாகவும் அந்தந்த நிலைக்கேற்ப கருதப்படுகிறது.

ஆகவே நாம் காணும் அனைத்துமே மெய்ப்பொருளாகிய இறைநிலையேயாகும்.

பெரிய பொருளான மெய்ப்பொருள் நானாகவும் உள்ளது.

““நான் யார்?” என்ற கேள்விக்கு உள்

நாடி, உண்மை விடை கண்டோர்,

“நான் நிறைவான பரம்” என்றார்

நாவால் மட்டும் பிறருக்கு

“நான் தெய்வம்” என்றுரைத்து, பதில்

நல்ல உணவைப் பெறுவர் பலர்!

“நான் பிரம்மம்” ஆம் கருத்தறிந்த

நல்லோர் உலகுக்கு ஒளி போல்வர்!” ஞாக.பா.1132)

நான் என்ற கேள்வி ஒவ்வொரு மனிதரிலும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுகிறது இயல்பு.

அகநோக்கு தவப்பயிற்சியின் மூலம், உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு,

அந்த அறிவே தெய்வமாம் உள்ளது என்பதை உணர்ந்தவர்கள்

“நான் எங்குமே நிறைவான பரம்” என்று உணர்ந்ததை உணர்ந்தவாறு கூறினார்கள்

ஆனால் வாய் வார்த்தையாக நான் கடவுள் என்று பலரும் கூறி

அதற்குப் பிரதியாக நல்ல உணவைப் பெற்று உண்பார்கள்.

இறைநிலையாகிய பிரம்மமே எல்லாமாக ஆகி, எல்லாவற்றிலும்

இருப்பாக இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது.

அதுவே நானாகவும் இருக்கிறது என்ற கருத்தை உணர்ந்த நல்லவர்கள்.

உலகுக்கு ஒளி காட்டும் உயர்வானவர்கள் ஆவர். அந்த உயர்ந்த நிலையில்

நாமும் ஆனந்தமாக வாழ்வோமாக.

# தற்பரமது ஆன பரதேவதையை அஞ்சலி செய்வாம்

“அங்கிங்கெனாபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாய்” என்னும் தாயுமானவரின் தாரக மந்திரத்திற்கும்,

“எல்லாம் செய் வல்ல தெய்வம் எங்கும் நிறை தெய்வம்” என்கின்ற இராமலிங்க வள்ளலாரின் வாக்கிற்கும்,

“எல்லாம் வல்ல தெய்வமது எங்கும் உள்ளது நீக்கமற” என்ற வேதாத்திரிய சத்தியத்திற்கும் விஞ்ஞானம் தந்த பிரத்யட்சமான சாட்சிதான் இன்று நாம் உபயோகித்து வரும் “இன்டர்நெட்”

“எங்கும் நிவைாக, இருக்கிறார் கடவுளென்பீர்

இங்கு நம்உடல் உள்ளத்துறைந்தும் இருப்பாரன்றோ?

அங்கங்கே போய்த்தேடி அலைவானேன் அவர்க்காக

தங்க நம் உயிர்க்குயிராம் தவநிலையில் அவரேநாம்.” (ஞாக.பா.1123)

தெய்வம் என்ற இறைநிலை எங்குமே நீக்கமற நிறைவாக இருக்கிறார். அவரே கடவுள் எனப்படுபவர் என்றெல்லாம் கூறுகிறீர்களே, அப்படியானால் எங்குமே உள்ள கடவுள் நம் உடலிலும் உள்ளத்திலும் கூட உறைந்து இறுகி இருப்பார் அல்லவா?

எதற்காக அங்கே இங்கே என்று போய்க் கடவுளைத்தேடி அலைய வேண்டும்? நமது உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே நம்மில் தங்கித் தேங்கி. தாங்கி, இயங்குகிறது என்பதை அகநோக்குத் தவத்தின் மூலம் உணர்ந்து கொள்ளும் போது பேரறிவாகிய தெய்வமே சிற்றறிவான நாமாகவும் உள்ளது என்பதை உணர்ந்து கொள்வோம். – என்பது வேதாத்திரியம்.

எனவே எல்லையற்று எங்கும் நீக்கமற நிறைந்துள்ள வெளியின் தன்மாற்ற வெளிப்பாடே இப்பிரபஞ்சம். இந்தத் தன்மாற்றம் நிரந்தரமானது.

வெளி என்ற சுத்தவெளியின் தன்மாற்றமே இப்பிரபஞ்சம் என்னும் சத்திய வாக்கினால் பல அசத்தியங்கள் அடிபடப் போகின்றன.

தன்மாற்றம் என்பது ஆற்றலும், அறிவுமாக இருக்கிற வெளி தானாகவே மாற்றம் அடைந்து பலவாகப் பெருகுகின்றது என்பது இதன் பொருள்.



அப்படிப் பெருகிய பலபொருள்களில் நானும் ஒருவன். அந்த வெளியைக் கடவுள் என்றால், அந்தக் கடவுளின் அவதாரங்களே நாம் காண்கிற அனைத்தும். அனைத்துமே கடவுளின் அவதாரம் என்றால், அவதாரங்களுக்கு பத்து என்றும், பதினைந்து என்றும் எண்ணிக்கைகளைத் தரமுடியுமா?

ஒன்றே பலவாகத் தன்மாற்றம் அடைவதால். அந்த ஒன்று குறைவதில்லை. நிரந்தர மாதலால்அதற்குப் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. பிறப்பும் இறப்பும் இல்லாததே வெளி. வெளிக்கு குடலுமில்லை. உடலுமில்லை.

அந்த வெளியிலிருந்து பல உருவங்கள் தோன்றலாம். மாறலாம். மறையலாம். தோன்றுவதும், மறைவதும் பொருளல்ல. பொருளினால் ஆன உருவங்கள்தான்.

வெளிக்கு உருவமில்லை. ஆனால் வெளியில் எத்தனை உருவங்கள். உருவமில்லாத ஒன்று எத்தனை உருவங்களாக வருகிறது என்று உணர்ந்த நிலையில்,

"உருவன்றியே நின்று உருவம் புணைக்கும்

கருவன்றியே நின்றுதான் கருவாகும்"

என்பது திருமந்திரம்

என்னில் நிகழ்கின்ற செயல்களின் இயக்க ஒழுங்கிற்கு காரணமாக அமைவது என்னில் செயல்படுகிற வெளியின் அறிவே. அனைத்துக்குள்ளும் அதனதன் இயக்க ஒழுங்கா வெளிப்படுவது வெளியின் மூல அறிவேதான்.

"ஒவ்வொரு பொருளும் பரம முதலாய்

அவ்வுரு வரையில் வந்த கதை

செவ்விய பரிணாமம்

சிறப்பை உணர்வாய் நீயும்அதே" (ஞாக.பா.1649)

"ஒவ்வொரு தோற்றப் பொருட்களும், பர நிலையிலிருந்து அந்த வடிவமாகும் வரை ஏற்பட்ட மாற்றங்களுக்கான கதையை பரிணாமம் என்ற புதுமையான பக்குவப்படுத்தப்பட்ட சிறு வார்த்தையால் கூறப்படுகிறது. ஆதியின் பரிணாமச் சிறப்பை அதுவே நீயுமாகி இருப்பதை உணர்வாயாக!"

என்று வேதாத்திரியம் சொல்லியவாறு, வெளியின் தன்மாற்றச் சரித்திரத்தின் ஒரு கட்டமே நான். ஆயினும், நான் என்பதை நான் எப்படி, எந்த வகையில் உணர்கிறேன் என்பதையும் பார்க்க வேண்டும்.

இப்பாடலில்– தாயுமானவர் வெளியின் தன்மைகளை பலவாறாக பட்டியலிட்டு காட்டுகிறார். இருப்பினும் சித்தத்தால் ஆராய்ந்து அறிய முடியாது.

ஆயினும் அச்சித்தத்தின் உள்ளே தெய்வத் தன்மையுடனும், ஒளியாயும் விளங்கும் பொருளை, சிதாகாசத்தில் நிலைத்து நிற்கும் மேலான தெய்வத்தை கைகூப்பி வணங்குவோம் என்று பாடுகிறார்.

**சிதாகாசம்** என்பது உணர்வுவெளி. பிரேமாகாசம் என்பது அன்பின் எல்லையற்ற விரிவு. பரமாகாசம் என்பது அனைத்தையும் கடந்த, அனைத்தையும் தன்னுள் அடக்கிய முதலும் முடிவுமற்ற பரப்பிரம்மம்.

அத்துவித வஸ்துவைச். சொப்ரகா சத்தனியை
அருமறைகள் முரசு அறையவே
அறிவினுக்கு அறிவாகி ஆனந்த மயம்ஆன

ஆதியை அநாதியேக

தத்துவ சொருபத்தை. மதசம்ம தம்பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புஷ்கல நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வ்யோமநிலையை

நித்ததிர் மலசகித நிஷ்ப்ரபஞ் சப்பொருளை.
நிர்விஷ்ய சுத்தம் ஆன
நிர்விகா ரத்தைத் தடஸ்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்

சித்தஅறி யாதபடி சித்தத்தில் நின்று இலகு
திவ்யதே சோமயத்தைச்.
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரமது ஆனபர
தேவதையை அஞ்சலி செய்வாம்.” (ஞாக.பா.3)

- உயிரும் தானும் வேறு வேறாய் இருப்பினும், உயிர் மலபரிபாகம் உற்றபின்பு, தன்னுடன் இரண்டறக் கலக்கச் செய்யும்) இரண்டற்ற பொருளை.
- ஓம் என்னும் பிரணவ ஒளியாக விளங்கும் சிறப்பு உடையதை.
- அரிய வேதங்கள் பறைசாற்ற அறிவுக்கு அறிவாய் விளங்குவதை.
- பேரின்ப மயமாய் விளங்கும் மூலத்தை.
- தொடக்கம் என்ற ஒன்று இல்லாததை.
- சிவம் என்னும் ஒரு பொருள் தான் உண்டு என்னும் உண்மையை.
- மதம் என்ற ஒன்றை ஏற்றுக் கொள்ளாததும்,
- எதனையும் பற்றி நிற்காததும்,
- என்றைக்கு நிலைத்து நிற்பதும்,
- நிறைவாய் விளங்குவதும்,
- தனக்கென ஒரு பற்றுக்கோடு இல்லை ஆயினும் உலகு அனைத்துக்கும் பற்றுக்கோடாய் விளங்குவதும்,
- ஆகிய வெட்டவெளியை,
- நிலைபேறு உடையதும், மலமற்றதும், எல்லா உயிர்களுக்கும் அப்பாற்பட்டு நிற்பதும் ஆகிய பொருளை.
- கண்ணுக்குப் புலப்படாததும்,
- தன்னிலையில் மாறுபாடு கொள்ளாததும்,
- ஆகிய பொருளை. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் மூலம் தன் உண்மையை வெளிப்படுத்திக் கொள்வதும், குற்றமற்றதும், பழுது இல்லாததும் ஆகிய பொருளை.

சித்தத்தால் ஆராய்ந்து அறிய முடியாது. ஆயினும் அச்சித்தத்தின் உள்ளே தெய்வத் தன்மையுடனும், ஒளியாயும் விளங்கும் பொருளை. சிதாகாசத்தில் நிலைத்து நிற்கும் மேலான தெய்வத்தை கைகூப்பி வணங்குவோம். என்று தாயுமானவர் பாடுகிறார்.

வேதாத்திரியமோ முழுமுதற்பொருள் நம் அறிவாய் ஆற்றும் என்று அடித்துச் சொல்கிறது, ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.

"அழுத்தம்எனும் உந்தாற்றல் ஒன்றைக் கொண்டே,

அணுமுதலாய் அண்டகோடி அனைத்தும் ஆக்கி

வழுத்துமோர் அறிவுமுதல் ஐந்தும் ஆறும்

வகைவகையாம் உயிரினங்கள் தோற்று வித்து,

முழுத்திறனுடன் காத்து,முடிக்கும் மேலாம்

முழுதற் பொருளே நம்மறிவாய் ஆற்றும்

பழுத்தநிலை வரும்வரையில் "நீ, நான்" என்போம்

பதமடைந்தோம். ஒன்றானோம். பரமானந்தம்." (ஞாக.பா.3)

- இறைநிலையானது இப்படிதான் இயங்க வேண்டுமென்ற தன் அறிவாலும் தனது ஆற்றலாலும் எழுச்சி பெற்ற பிரபஞ்சத் தோற்றப் பொருட்களாகத் தன்நிலையில் மாற்றம் பெற்றுள்ளது.
- இறை நிலையின் மாபெரும் ஆற்றல் என்பது அழுத்தம் ஆகும். அந்த அழுத்தம் தன்னிலே, தன்னையே இறுக்கிக் கொள்ளும் ஆற்றலாகவும், மற்றவற்றில் சூழ்தழுத்தும் ஆற்றலாகவும் உள்ளது.
- தனது மாபெரும் உந்து ஆற்றலால் தன்னையே இறுக்கிக் கொள்ளும் போது. நெருக்கமுற்று, பிதுக்கமுற்று, நொறுங்கித் தூசுகள் போல தனக்குள்ளாகவே மிதந்து கொண்டிருக்கிறது.

- தானாக இருந்தபோது தன்னிறுக்க ஆற்றலாயிருந்தது. பிறிதொன்றாகிய தூசுகளைச் சூழ்ந்து அழுத்துவதால் சுழல ஆரம்பிக்கிறது.
- தற்சுழற்சியுடைய தூசுத்துகள்கள் என்னும் இறைத்துகள்களை முன்னோர்கள் பரத்தில் தோன்றிய அணு என்பதால் பரமாணு என்றனர்.
- பரமாணுக்கள் இறைநிலையில் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் நெருங்கும்போது கொத்தியக்கமாக ஆயிரமாயிரம் துகள்கள் சேர்ந்து இயங்கும் அமைப்பு விண் எனப்படும்.
- விண்ணிற்குள் சிறைப்பட்ட இறைத்துகள்கள் தற்சுழற்சியாயிருப்பதால், இறைநிலையின் அழுத்தத்தால் கனமானவை மையம் நோக்கித் தள்ளப்பட்டு, லேசானவை வெளித்தள்ளும் சக்தியாவதால், விலகுமாற்றல் காரணமாக, ஒரு சுழற்சியோடு மற்றொரு சுழற்சி ஒருபோதும் ஒட்டிக் கொள்ள முடிவதில்லை.
- இறைநிலையில் உராய்ந்து சுழல்வதால் ஏற்படும் தள்ளல் கொள்ளல் சக்தி காந்தம் எனப்படுகிறது.
- விண்ணும் சுழல்வதால் அதனுள்ளேயிருந்து காந்தம் விரிவலையாகி வெளித்தள்ளும் சக்தியாகிறது.
- அதன் திணிவு குறைவதால் வேகம் அதிகமான விண் நெருங்கி இயங்க வாய்ப்பேற்படுவதால், விண்ணும் இறைநிலையும் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் இணையும் நிகழ்ச்சி பஞ்சபூதங்கள் எனப்படுகிறது.
- பஞ்சபூதங்களும் ஒன்றிணைந்து எண்ணிலடங்கா கோள்களை உள்ளடக்கிய பிரபஞ்சத் தோற்றமாகியது.
- ஐந்து பௌதீகப் பிரவுகளும் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் இணைந்து ஒன்றை ஒன்று காக்கும்படியான அமைப்பில் காந்தச் சுழலும் கருமையமும் அமைந்து ஜீவன் என்ற நிலை பெற்று ஓரறிவு தாவரம் முதல் ஆறாவது அறிவு பெற்ற மனிதன்வரை தன்னிலையில் மாற்றம் பெற்றுள்ளது.

- இறைநிலை முதல் மனித மனம் வரை அறியும் அறிவு, மனிதனிலே பகுத்தறிவாக உள்ளது.
- உண்மைப் பொருளான அறிவே, மேன்மைப் பொருளான மனமாக மனிதனிலே மலர்ந்துள்ளது என்பதை உணரும்வரை, எல்லாவற்றையும் தன்னிலேயிருந்து வேறுபடுத்தித்தான் மனிதன் பார்ப்பான்.
- சிற்றறிவை பேரறிவிலே லயமாக்கும் நிலையடையும்போது, பரமே அந்தமாக, முடிவாக இருப்பதை உணர்வான்.

தாயுமானவர் சொல்லும் இறைவழிபடுதலே ரிஷிகள், புத்தர், இயேசு, நபிகள், விவேகானந்தர், வேதாத்திரி மகரிசி என நம்மிடையே வந்த மகான்களின் ஆதாரமாக விளங்கியிருக்கிறது. ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.

"எங்கும் எக்காலத்தும் எல்லாப் பொருட்களுடும்

இடையற்ற மறைபொருளாய் இருந்து பேரண்ட மெங்கும்

தங்கித் தழைத்தோங்கும் தற்பரத்தை யான் உணர்ந்தேன்

தனித்து மனத்துள் நிலைத்து தவ மாற்றும் சாதனையால்" (ஞாக.பா.)

என்னும் வோதத்திரியத்தின் வாக்கு தவத்தின் மேன்மையை உயர்வை நமக்கு காட்டுகிறது. தவமே தலை சிறந்த வழிபாடாகும். தவமே தலை சிறந்த இறை வணக்கம். நாமும் நாள்தோறும் தவமியற்றி ஆனந்தமாக வாழ்வோமாக!

# துணைநின்ற நூல்கள்


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம்,ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ, வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
8. உள்முகப் பயணம், ஜெ.வெண்ணிலா, இணையதள முகநூல்பக்கம்.